

# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# Performance Report
# 2015

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

# කාර්යසාධන වාර්තාව - 2015

# செயலாற்றல் அறிக்கை - 2015

# Performance Report - 2015

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**

කාර්යසාධන වාර්තාව 2015
செயலாற்றல் அறிக்கை - 2015
**Performance Report 2015**

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

P.O. Box 562, No. 45, St. Michale's Road, Colombo 03.
Tel: 0112 541 369 Fax : 0112 328 117
Email : smpid@sltnet.lk / mhplanning2016@gmail.com
Web site www.mpid.gov.lk

Printed by : Printec Establishment | 0112 815 816

# செயலாற்றல் அறிக்கை - 2015

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

## தொலைநோக்கு

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய சமூகங்களுடன் சரிசமமாக இருக்கும் வகையில் கௌரவம், சுயமரியாதை மற்றும் சமூக அந்தஸ்துடன்கூடிய ஒரு கிராமிய சமூகமாக நிலைமாற்றுதல்

## குறிக்கோள்

வாழ்விடம், வாழ்க்கைத்தரம் மற்றும் சமூகப் பொருளாதார வசதிகளை முன்னேற்றுவதனூடாக பெருந்தோட்டத்துறை சமூகத்தின் நலன்களை மேம்படுத்தல்

# உள்ளடக்கம்


1. அறிமுகம்

2. நிறுவனக் கட்டமைப்புசார் நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்ட அமுலாக்கம்

3. அமைச்சின் பதவியணி குறித்த தகவல்கள்(அனுமதிக்கப்பட்டதும் தற்போதுள்ளதும்)

4. அமைச்சு முன்னுரிமையளிக்கும் விடயங்கள்

5. அமைச்சின் செலவினங்கள் பற்றிய சாராம்சம்

6. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் / கருத்திட்டங்களின் முன்னேற்றம்

    6.1 மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு

    6.2 வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதி முன்னேற்றம்

    6.3 பின்தங்கிய பகுதிகளின் சமூக - பொருளாதார அபிவிருத்தி

7. அமைச்சின் குறிப்பிட்டுச்சொல்லத்தக்க அடைவுகள்.

    7.1 பெருந்தோட்டத்துறை சமூகத்தின் சமுதாய அபிவிருத்திக்கான ஐந்தாண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை வகுத்தமைத்தல்.

    7.2 பெருந்தோட்டத்துறை சமூகத்தின் வாழ்வுநிலை மதிப்பை முன்னேற்ற உசிதமான வீடுகளை அமைத்து அதன் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல்.

    7.3 பெருந்தோட்டத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளல்.

8. அமைச்சின் அதிகார வரம்பெல்லைக்கு உட்பட்ட நிறுவனங்களின் முன்னேற்றம்.

    8.1 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு

    8.2 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

# 01. அறிமுகம்

இலங்கை, தனது சமூக மற்றும் மானிட அபிவிருத்தித் துறையில் அடைந்துகொண்டுள்ள உயர்மட்ட அடைவுகள் சம்பந்தமாக நீண்டகால அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதுடன், 2015ஆம் ஆண்டளவில் புத்தாயிரமாண்டின் அபிவிருத்தி இலக்குகளை (MDGs) அடைந்து கொள்வதற்கு நன்றாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை புத்தாயிரமாண்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு உகந்த பாதையில் பிரவேசித்திருந்தபோதும், மேலும் ஏராளமான சவால்களை நாடு எதிர்நோக்கி வருகின்றது. எய்தப்பெற்றுள்ள மெச்சத்தகு அடைவுகள் நாட்டிலும் அதேபோல், இனப்பிரிவுகள் மற்றும் சமூகக் குழுமங்களுக்கு இடையிலும் சமமாகப் பகிர்ந்துசெல்லப்படவில்லை.

இந்திய வம்சாவளியினரான இலங்கையில் வாழும், பெரும்பாலும் தமிழ் மக்களாகவுள்ள பெருந்தோட்டங்கள் சார்ந்த சமுதாயம் அவ்வாறான ஒரு குழுமமாக விளங்குவதுடன், ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து அது ஒரு தனித்துவ நிலையாகும். குறைந்த வருமான மட்டத்துடனும் உயர் வறுமை நிலையிலும் வாழும் பின்தங்கிய மக்களாக அவர்கள் மாறியுள்ளனர். தேயிலை, இறப்பர் தோட்டங்களை அண்டி அமைக்கப்பட்டுள்ள, அவர்கள் வாழும் லயன் அறைகளைக்கொண்ட வரிசை வீடுகள், அவர்களின் வறிய தொழிலாளர் வாழ்வுக் கோலத்தைப் பிரதிபலித்துக்காட்டுகின்றது. இலங்கை தேசிய மட்டத்திலான புத்தாயிரமாண்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் ஏராளமான குறிகாட்டிகளை உரிய திசைமுகப்போக்குடன் நகர்த்திச்சென்றபோதும், தோட்டத்துறை தொடர்பாக கருத்திற்கொள்ளுமிடத்து அது உரிய பாதைக்கு வெளியே அமைந்துள்ள, தேசிய மட்டத்துடன் இசைவுறாத ஒரு நிலையாகும்.

**அட்டவணை 1: தோட்டப்புற சமுதாயம் பற்றிய புள்ளிவிவரங்கள்**

| குறிகாட்டி | தேசிய | நகர | கிராமிய | தோட்டப்புறம் |
|---|---|---|---|---|
| **வறுமைநிலை மற்றும் மனித குடியேற்ற வாழிட குறிகாட்டிகள்** | | | | |
| வறுமைநிலை தலைக் கணிப்பீட்டுக் குறிகாட்டி (குடும்ப அலகு வருமான-செலவு முறைமை 2013) | 6.7 | 2.1 | 7.6 | 10.9 |
| பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்ளல் % (குடும்ப அலகு வருமான-செலவு முறைமை 2013) | 89.7 | 98.9 | 90.9 | 52.4 |
| ஓரளவு நிரந்தரமான வீடுகள் % (குடும்ப அலகு வருமான-செலவு முறைமை 2013) | 17.8 | 7.4 | 16.9 | 76.1 |
| எழுத்தறிவு விகிதம் % (குடும்ப அலகு வருமான-செலவு முறைமை 2013) | 95.7 | | | 86.1 |
| மேம்படுத்திய சுகவாழ்வு பாதுகாப்பை ஏற்படுத்திக்கொண்ட குடும்பங்கள் % (குடும்ப அலகு வருமான-செலவு முறைமை 2012/13) | 87.2 | | | 73.3 |
| நிறுவப்பட்ட தேசிய தேக தராதரங்களுக்கு ஏற்ற விதத்திலான முன்சிறுவர் நலக்காப்பு நிலையங்கள் % | 50.7 | | | 24 (சகல தோட்டங்கள்)<br>64 (பி.பெ.க. தோட்டங்கள்) |
| **சுகாதாரக் குறிகாட்டிகள்** | | | | |
| புதிய பிறப்பு மரண விகிதம் % (1000 பிறப்புகளுக்கு) | 11 | 6.0 | 15.0 | 18.0 |
| சிசு மரண விகிதம் % (1000 பிறப்புகளுக்கு) | 9.7 | 10.0 | 19.0 | 29.0 |
| 05 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் மற்றும் இனப்பெருக்க வயதிலுள்ள பெண்களுக்கு பொதுவாக காணப்படும் குருதிச்சோகை % | 20% (யுனிசெ.்.ப் 2012) | | | 61% (யுனிசெ.்.ப் 2012) |
| **போசாக்கு சார்ந்த குறிகாட்டிகள்** | | | | |
| 05 வயதுக்குக் குறைந்த வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் விகிதம் | 18 | 13.8 | 16.2 | 40.2 |
| 05 வயதுக்குக் குறைந்த எடை குறைந்த சிறுவர்கள் விகிதம் | 21.8 | 16.5 | 21.2 | 30.1 |
| பிறப்பின்போது குறை எடை விகிதம் (2.5 கி.கி.க்கு குறைந்த) | 16.6 | 12.8 | 16.4 | 31.0 |
| 05 வயதுக்குக் குறைந்த மெலிந்த (உயரத்திற்கேற்ற எடையிற் குறைந்த) சிறுவர்கள் | 14.7 | | | 16.4 |

மூலம்: சனத்தொகை மற்றும் சுகாதார மதிப்பீடு (DHS)- 2006/07, மனை அலகு வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு (HIES)2012/13

இதன்படி, பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் தோட்டப்புற மக்களின் வாழ்வுநிலையைக் கட்டியெழுப்பப் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளன. எனினும், தற்போதுள்ள பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கு தொடர்ச்சியான, நிரந்தரமான ஒரு செயற்பாடு அவசியமாகும்.

2015ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதையடுத்து, அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு நிறுவப்பட்டது. தோட்டப்புறவாழ் மக்களின் வாழ்விடங்கள், வாழ்வுநிலை மற்றும் சமூக-பொருளாதார வசதிகளை முன்னேற்றி பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கு பயனுறுதிவாய்ந்த மனித வளமொன்று இருப்பதை கவனித்துக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுல்படுத்தி, அவர்களின் நலனோம்பலையும் கௌரவத்தையும் அதிகரிப்பது அமைச்சின் முக்கிய எதிர்பார்ப்பாகும்.

நாட்டிலுள்ள மிக அண்மிய பாரிய பிரச்சினைகள்மீது கவனம்செலுத்தி “100நாள் வேலைத்திட்டத்தை” முன்வைப்பது, தம்மால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளின் கீழ் புதிய அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட மிக முக்கியமான முன்னெடுப்புகளில் ஒன்றாகும். அவ்வேலைத்திட்டத்திற்கு இணையாக, தமது செயற்றிட்டத்தை வகுத்தமைக்கும் நோக்குடன் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனும் பயனாளிகளுடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் பல்வேறு திடீர் கருத்துதிர்ப்பு (brain Storming) அமர்வுகளும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்பட்டன. பெருந்தோட்டத்துறை மக்களின் வீட்டுப் பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுத்து, அவர்களின் வாழ்வுநிலையையும் கௌரவத்தையும் கட்டியெழுப்புவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை இலக்கிட்டு, 100 நாள் செயற்றிட்டம் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்துகொண்டது.

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் முக்கிய குறிக்கோள்களை எய்துவதன்மீது கவனம்செலுத்தி, 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் முடுக்கிவிடப்பட்ட பணிகள் தொடர்ந்தேர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டதுடன், அமைச்சின் அமுல்படுத்தும் முகவராண்மையான பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் (PHDT) அதிகார வரம்பெல்லையின்கீழ் வரும் ஏழு[1] பெருந்தோட்டப் பகுதிகள், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளுராட்சி மன்றங்கள் ஊடாக இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமான அளவில் தேசிய ரீதியாக 28% சதவீதத்திற்கு பங்களிப்புச்செய்யும், பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 9.201 என்ற பரிந்துரையிலும் குறித்துரைக்கப்பட்டிருக்கும், குறிப்பாக இந்திய வம்சாவளியினரான பெருந்தோட்டத்துறையின் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கை முறைமையை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் “முன்னுரிமைத் துறைகள்” மீதமைந்த பல்வேறு முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

1. வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
2. வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதி மேம்படுத்தல்
3. பின்தங்கிய பகுதிகளின் சமூக-பொருளாதார அபிவிருத்தி

2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலை அடுத்து, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சானது, மலைநாட்டுப் புதிய கிராமங்கள்,

[1] ***பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திற்கு (PHDT) உரிய 07 பெருந்தோட்டப் பகுதிகள்:-*** *நுவரெலியா, ஹட்டன், கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, காலி.*

***பெருந்தோட்ட பிரதேசங்கள்:****07 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் பிராந்தியத்திலுள்ள 25 பெருந்தோட்டத்துறை கம்பனிகளுக்கு கீழ் வருகின்ற 435 தோட்டங்களும் அடங்கலாக நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, மாத்தறை, காலி, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, குருணாகல், புத்தளம், கொழும்பு ஆகிய 12 மாவட்டங்களுக்குரிய சில பிரதேசங்களும் இதிலடங்கும்.*

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு என்ற புதிய பெயருடன் முன்னிருந்த அதே அமைச்சரவை அமைச்சரின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டது. மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையானது 2015 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விஸ்தரிக்கப்பட்டு, பெருந்தோட்டத்துறைசார் சமூகத்தின் நலன்களின் பொருட்டு ‘‘சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமும்’’ அமைச்சின் அதிகார வரம்பெல்லையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

‘‘2015 செயலாற்றல் அறிக்கை’’ எனும் இவ்வறிக்கை, முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகார வரம்பெல்லையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட, அதேபோல் புதிய அமைச்சான மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் 2015 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை தொடர்ந்தேர்ச்சியாக அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினதும் கருத்திட்டங்களினதும் முன்னேற்றம் பற்றி விபரிக்கின்றது.

# 02. நிறுவனக் கட்டமைப்புசார் நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்ட அமுலாக்கம்

மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு (2015 செப்டெம்பர் 21இல் இருந்து)

*பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (தலைமை அலுவலகம்)*

**பிராந்திய அலுவலகங்கள்**

- ஹட்டன்
- நுவரெலியா
- கண்டி
- பதுளை
- கேகாலை
- இரத்தினபுரி
- காலி

*சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்*

- தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் ஹட்டன்
- நோர்வூட் விளையாட்டு வளாகம்
- றம்பொட கலாசார மத்திய நிலையம்
- 'பிரஜாசக்தி' மற்றும் 'நவசக்தி' அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

*மாவட்ட செயலகங்கள்*

*பிரதேச செயலகங்கள்*

*உள்ளூராட்சி அதிகாரசபைகள்*

# 03. அமைச்சின் பதவியணி குறித்த தகவல்கள்

**அட்டவணை – 02: பதவியணி பற்றிய தகவல்கள் (*31.12.2015 வரை அனுமதியளிக்கப்பட்டதும் தற்போதுள்ளதும்*)**

| இல. | பதவி | சேவை | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி | ஏலவேயுள்ள பதவியணி |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | | 1 | 1 |
| 02. | மேலதிக செயலாளர் | இலங்கை நிருவாக சேவை | 2 | 1 |
| 03. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இலங்கை நிருவாக சேவை | 1 | 1 |
| 04. | பணிப்பாளர் | இலங்கை நிருவாக சேவை | 1 | 1 |
| 05. | பணிப்பாளர் | இலங்கை திட்டமிடல் சேவை | 1 | 1 |
| 06. | பணிப்பாளர் | இலங்கை பொறியியலாளர் சேவை | 1 | 1 |
| 07. | பிரதம கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | 1 |
| 08 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | 1 |
| 09 | உதவி / பிரதிப் பணிப்பாளர் | இலங்கை நிருவாக சேவை | 1 | - |
| 10 | உதவி / பிரதிப் பணிப்பாளர் | இலங்கை திட்டமிடல் சேவை | 1 | 1 |
| 11 | உதவி / பிரதிப் பணிப்பாளர் | இலங்கை பொறியியலாளர் சேவை | 1 | 1 |
| 12 | கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | 1 | 1 |
| 13 | உதவிச் செயலாளர் | இலங்கை நிருவாக சேவை | 1 | 1 |
| 14. | நிருவாக உத்தியோகத்தர் | முகாமைத்துவ சேவைகள் | 1 | - |
| 15. | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | 2 | - |
| 16. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இலங்கை தொழில்நுட்பச் சேவை | 3 | - |
| 17. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளர் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் சேவை | 1 | - |
| 18. | செயலாளருக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | 1 | 1 |
| 19. | புள்ளிவிபர உத்தியோகத்தர் (புள்ளிவிபரவியலாளர்) | | 1 | - |
| 20. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 14 | 14 |
| 21. | முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ சேவைகள் | 20 | 9 |
| 22. | பெருந்தோட்ட சமூகத் தொடர்பாடல் இலகுபடுத்துனர் | அமைச்சுக்குரித்தான சேவை | 255 | 255 |
| 23. | சாரதி | இணைந்த சாரதி சேவை | 12 | 12 |
| 24. | அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் சேவை | 12 | 9 |
| | **மொத்தம்** | | **337** | **312** |

# 04. அமைச்சு முன்னுரிமையளிக்கும் விடயங்கள்

**அட்டவணை – 03:** அமைச்சு முன்னுரிமையளிக்கும் விடயங்கள்


| | பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் | கருத்திட்டங்கள்/செயற்பாடுகள் |
|---|---|---|
| 1. | உரிமை மற்றும் சொத்துரிமையுடையதான மலைநாட்டுப் புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் | |
| | நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான 308 வீடுகள் | |
| | | நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 308 வீடுகளை அமைத்தல் |
| | புதுவாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | |
| | | லயன் அறைகளில் வாழும் பெருந்தோட்டத்துறை மக்களுக்கான 647 வீடுகள் |
| | இந்திய நன்கொடையினால் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டம் சார்ந்த 4,000 வீடுகள் | |
| 2. | வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதி முன்னேற்றம் | |
| | | தற்போது வாழ்வதற்கு ஏற்ற நிலையிலற்ற700 லயன் அறைகளுக்கு மீளக் கூரையிடுதல் |
| | | சுகாதாரப் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் செயற்றிட்டங்கள் 19 ஐ நடைமுறைப்படுத்தல். |
| | | 700 மலசலகூடங்கள் அமைத்தல். |
| | | 21 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அமைத்தல். |
| | | இந்திய நன்கொடை உதவியினால் 70 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அமைத்தல். |
| 3. | பின்தங்கிய பகுதிகளின் சமூக-பொருளாதார அபிவிருத்தி | |
| | புதிய முன்னெடுப்புக்கள்: | |
| 4. | பெருந்தோட்டத்துறை சமுதாய அபிவிருத்திக்கான ஐந்தாண்டுத் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை(NPA)வகுத்தமைத்தல் | |
| 5. | பெருந்தோட்ட சமுதாயத்தினரின் வாழ்வுநிலை மதிப்பை முன்னேற்றுவதற்கு வீடுகளுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுத்தல். | |
| 6. | பெருந்தோட்டத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான வெளிநாட்டு நிதியீட்டுக் கருத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளல் | |
| | | நீர்வழங்கல் மற்றும் சுகவாழ்வு வசதிகளை மேம்படுத்தல் |
| | | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் |
| 7. | இந்திய நன்கொடை உதவியினூடாக செயற்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்- | |

# 05. அமைச்சின் செலவினங்கள் பற்றிய சாராம்சம் (ஜனவரி– டிசம்பர் 2015)

**அட்டவணை – 04:** செலவினங்கள் பற்றிய சாராம்சம்

| வகுப்பாக்கம் / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2015ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபா.) | 2015 டிசம்பர் 30 அன்று உள்ளவாறான செலவினம் (ரூபா.) | செலவின வீதம் % |
|---|---|---|---|
| **மீண்டெழும்** | 322,030,000 | 271,078,561 | 84.18 |
| நபருக்கான வரும்படி | 194,400,000 | 173,711,838 | 89.36 |
| பொதுவான நிருவாகம் | 127,630,000 | 97,366,723 | 76.29 |
| **மூலதனம்** | 824,440,000 | 785,800,084 | 95.31 |
| பொதுவான நிருவாகம் | 24,440,000 | 17,669,278 | 72.30 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ** | | | |
| அ. மலைநாட்டுப் புதிய கிராமங்களுக்கான வீடுகள் | 350,000,000 | 349,736,997 | 99.92 |
| ஆ. வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 150,000,000 | 146,610,281 | 97.74 |
| இ. பின்தங்கிய பகுதிகளின் சமூக-பொருளாதார அபிவிருத்தி | 300,000,000 | 271,783,528 | 90.59 |
| முழு மொத்தம் | **1,146,470,000** | **1,056,878,645** | **92.19** |

**வரைபடம் - 01:** மூலதனச் செலவுகளின் சாராம்சம் எதிர்- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்



**அட்டவணை – 05: அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ****

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2015ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபா. மி.) | 2015 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான செலவினம் (ரூபா. மி.) | செலவின வீதம் % |
|---|---|---|---|
| **அ. மலைநாட்டுப் புதிய கிராமங்களுக்கான வீடுகள்** | | | |
| நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 308 வீடுகளை அமைத்தல் | 350.00 | 349.74 | 99.93 |
| குறைந்த வருமான வீடமைப்பு (புதுவாழ்வு வீடமைப்பு - 2015) | | | |
| புதுவாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (தொடர்ந்து வரும் செயற்றிட்டம்) | | | |
| உரித்துறுதிகள் வழங்குதல் (அமுல்படுத்தல் - பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு) | | | |
| **உப மொத்தம்** | **350.00** | **349.74** | **99.93** |
| **ஆ. வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்** | | | |
| இடைக்கால நடவடிக்கையொன்றாக 700 லயன் அறைகளுக்குப் புதிதாகக் கூரையிடல் | 43 | 42.79 | 99.51 |
| குடிநீர் வழங்கலுக்கு 19 உப கருத்திட்டங்களை ஏற்படுத்தல் | 13 | 11.37 | 87.46 |
| 700 மலசலகூடங்களை புதிதாக அமைத்தல் | 25 | 24.59 | 98.36 |
| 21 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைத் தரமுயர்த்தல் | 12 | 11.24 | 93.67 |
| அடிப்படை வசதிகளை வழங்கல்: புதிய மற்றும் எஞ்சியிருக்கும் வேலைகள் | 57 | 56.63 | 99.35 |
| **உப மொத்தம்** | **150.00** | **146.61** | **97.74** |
| **இ. பின்தங்கிய பகுதிகளின் சமூக-பொருளாதார அபிவிருத்தி** | | | |
| பிரவேச வீதிகளை அபிவிருத்திசெய்தல் | 150 | 39.3 | 104.34 |
| கல்வி வசதிகளை மேம்படுத்தல் | | 13.45 | |
| ஆன்மிக மற்றும் கலாசார அபிவிருத்தி | | 16.44 | |
| விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல் | | 20.66 | |
| பொதுவசதிகள் / விசேட செயற்பாடுகள் | | 25.42 | |
| தொடர் வேலை மற்றும் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் | 150 | 156.51 | 104.34 |
| **உப மொத்தம்** | **300.00** | **271.78** | **90.59** |
| **மொத்தம்** | **800.00** | **768.13** | **96.02** |

# 06. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் /கருத்திட்டங்களின் முன்னேற்றம்

(2015 ஜனவரி முதல் செப்டம்பர் வரை)

## 6.1 மலைநாட்டுப் புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு

பெருந்தோட்டத்துறை வாழ் மக்களுக்குச் சொந்தமான வீடு அலகுகளில் 58% சதவீதத்திற்கும் அதிகமானவை தற்காலிகக் கொட்டில்களாகக் காணப்படுவதோடு 169,000 குடும்பங்கள் அவற்றில் வாழ்கின்றன. போதுமான இட வசதிகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலைமைகள் அதில் காணப்படாமையினால் விரைவில் அதற்கு பதிலாகத் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடுகள் எழுந்துள்ளன. ஆகவே இவ்வாறான படைவீடுகள் (barracks) போன்று அமைக்கப்பட்ட லயன்அறைகள் நீக்கப்பட்டு தனி வீடுகள் எனும் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டிய அவசியக்கட்டம் ஏற்பட்டுள்ளது. இது நாட்டில் மிகவும் இன்னலுக்குரிய ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருப்பதனால் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்பட்ட பணிகளுக்கு விசேட முன்னுரிமையளித்து நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய தனியலகு வீடுகளை அமைத்தல், தற்போதுள்ள லயன் அறை வீடுகளைத் திருத்துதல், அவற்றுக்கு மீளக் கூரையிடுதல் போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டன.

### 6.1.1 நிலச்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 308 வீடுகளை அமைத்தல்

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா போன்ற மாகாணங்களில் நிலச்சரிவு காரணமாக, அல்லது தீப்பிடிப்பு அல்லது நிலச்சரிவு ஏற்படுவதற்கான கடும் அபாயநிலையிலுள்ள பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெருந்தோட்டத்துறை தொழிலாளர் குடும்பங்களுக்கு நுவரெலியா, ஹட்டன், கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி ஆகிய பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைபொறுப்பு நிதியத்திற்குரிய பிரதேசங்களை உள்ளடக்கக்கூடிய விதத்தில் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் 308 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 02படுக்கையறைகள், 01சமையலறை, 01விறாந்தை, சேர்த்தமைக்கப்பட்ட 01மலசலகூடம் என்பவற்றுடன் 07 'பேர்ச்' காணியில் 550 சதுர அடி நிலப்பரப்பளவான வீடொன்றுக்கு 1.2 மில்லியன் ரூபா செலவுடன் தனிவீடுகளை (நீர், மின்சாரம், பிரவேச வீதி முதலிய உட்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கான 0.2 மில்லியன் ரூபாய்க்கு உட்பட்டதான செலவுடன்) அமைப்பதற்கு விசேட அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.இவற்றில் 288 வீடுகளின் நிர்மாணப் பணிகள் 2015 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை பூர்த்தியடைந்துள்ளன. ஏனைய 20 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன. குறிப்பாக அவற்றுள் 16 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் கூரை அமைக்கின்ற கட்டத்தை அடைந்துள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கென 302.4 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது நீர்வழங்கல், சுகாதார வசதிகள், மின்சாரம், பிரவேச வீதி வசதிகள், மத வழிபாட்டுத்தலங்கள், சனசமூக நிலையங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் ஏனைய வசதிகளையும் உள்ளடக்குகின்ற கிராம / நகராக்கக் கருத்தேற்பின் அடிப்படையில் அமைந்ததாகும்.

**அட்டவணை 06: நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைக்கப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் (2015 ஜனவரி முதல் டிசம்பர் வரை)**

| பௌதிக ரீதியான முன்னேற்றம் | நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (PHDT) பிராந்தியம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | கேகாலை | பதுளை | கண்டி |
| நிர்மாணப் பணிகள் பூர்த்தியானவை | 288 | 97 | 62 | 30 | 12 | 47 | 40 |
| கூரை மட்டம் | 16 | 16 | - | - | - | - | - |
| அத்திவார வேலை பூர்த்தியானவை | 04 | 04 | - | - | - | - | - |
| மொத்தம் | 308 | 117 | 62 | 30 | 12 | 47 | 40 |

**உரு 01 : வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - டொலொஸ்வல தோட்டம் இல.02 அகலவத்த பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி, இரத்தினபுரி**



**அலகுகளின் எண்ணிக்கை** – 30
**பெறுமதி: ரூபா.** 26,157,486.60
**கருத்திட்டம் ஆரம்பித்த திகதி:** 2015.05.21
**முடிவடைந்த திகதி:** 2015.12.15

## 6.1.2 புதுவாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்: லயன் அறைகளில் வாழும் மலைநாட்டு சமுதாயத்தினருக்கு 647 வீடுகளை அமைத்தல்

'புதுவாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்' கீழ் அமைக்கப்படுகின்ற 617 வீடுகளுள் 61 வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை, எஞ்சியுள்ள வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 100 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்ட 30 புதிய வீடுகளின் நிர்மாணப் பணிகளும் தற்போது 7 பெருந்தோட்டப் பிராந்தியங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் வீடுகளை அமைப்பதற்கு 47% நன்கொடையாகவும், 53% கடனாகவும் வழங்கப்படுவதுடன், 7.5% வட்டியுடன் சேர்த்து 15 வருடங்களில் குறித்த ஊழியரின் சம்பளத்திலிருந்து இக்கடன்தொகை அறவிடப்படும்.

**அட்டவணை 07: புதுவாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| பௌதிக ரீதியான முன்னேற்றம் | வீடுகளின் எண்ணிக்கை (2014இலிருந்து முன்கொணர்ந்த) | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (PHDT) பிராந்தியம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| 100% பூர்த்தியானவை | 61 | - | - | - | 47 | 14 | - | - |
| 50% - 100% பூர்த்தியானவை | 196 | 107 | 44 | 25 | - | 20 | - | - |
| 25% -50% பூர்த்தியானவை | 84 | - | 10 | 15 | - | 39 | 20 | - |
| 0% -25% பூர்த்தியானவை | 276 | 96 | 30 | 25 | - | 45 | - | 80 |
| மொத்தம் | 617 | 203 | 84 | 65 | 47 | 118 | 20 | 80 |

**அட்டவணை 08: 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நுவரெலியா அக்கரப்பத்தனை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி, 'நியு போர்ட்மோர்' தோட்டத்தில் நிர்மாணிக்கப்படும் 30 புதிய வீடுகளின் முன்னேற்றம்**

| பௌதிக ரீதியான முன்னேற்றம் | வீடுகளின் எண்ணிக்கை 2015 |
|---|---|
| கூரை வேலை பூர்த்தி செய்யப்பட்டவை | 15 |
| கூரை மட்டம் | 3 |
| மேற்கட்டை (Lintel) மட்டத்திற்கு மேல் | - |
| யன்னல் மட்டம் | 11 |
| அத்திவார வேலை பூர்த்திசெய்யப்பட்டவை | 1 |
| மொத்தம் | 30 |

## 6.1.3 இந்திய நன்கொடையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற 4,000 வீடுகளுக்கான நிகழ்ச்சித்திட்டம்

பதுளை, நுவரெலியா மற்றும் ஹட்டன் ஆகிய பிரதேசங்களில் இந்திய நன்கொடை உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் 2017ஆம் ஆண்டிற்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### முதலாம் கட்டம் :

முதற்படியாக, 1,134 வீடுகளின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறித்த 1,134 வீடுகளுக்குமான புறஎல்லைக்கோட்டு அளவை, துண்டமாக்கல் அளவை, சமவுயரக்கோட்டு அளவை என்பவற்றைப் பூர்த்திசெய்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் தடைநீக்கச் சான்றுப்படுத்தலும் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் அமுல்படுத்தப்படும் நடைமுறையை இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் திருத்தியமைத்து, இத்திட்டத்தை அமுல்படுத்தத் தொடங்குவதற்கான இந்திய அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கின்றது. ஐ.நா. மனிதக் குடியிருப்பிற்கான அமைப்பு (UNHABITAT), சர்வதேச செஞ்சிலுவைப் பேரவை (IFRC), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA), மனிதக் குடியிருப்பு ஒழுங்கமைப்பு (Habitat for Humanity) தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் (EWHCS) என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் முகவராண்மைகளாக (IAs) அடையாளம் காணப்பட்டுள்ள நிறுவனங்களுள் அடங்கும். வீடொன்றை அமைப்பதற்கு ஏற்படும் அலகுக்கான கிரயம் 01 மில்லியன் ரூபாவாகும். அதில் ரூபா 50,000.00 பெறுமதியான பங்களிப்பு பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்தும் (RPCs) பயனாளிகளிடமிருந்தும் பெறப்படவுள்ளதோடு, மீதித் தொகையானது இந்திய நன்கொடை உதவி நிகழ்ச்சித்திட்டத்தினால் பொறுப்பேற்கப்படும். நிலஅளவை, காணியைத் தயார்படுத்தல், பிரவேசிப்பதற்கான வீதிகளை அமைத்தல், நீர்வழங்கல், மின்சாரம் மற்றும் ஏனைய பொது உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை ஏற்பாடு செய்வதற்கான செலவினத்தை இலங்கை அரசாங்கம் ஏற்க இணங்கியுள்ளது. இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம், உரிய ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படும்.

### இரண்டாம் கட்டம் :

**எஞ்சிய 2,866 வீடுகள் :-**இந்தக் கட்டத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தினதும், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளினதும் ஆலோசனைகளை ஆராய்ந்து நிலச்சரிவு காரணமாக அல்லது தீப்பிடிப்புக்காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும், நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகக்கூடிய கடும் ஆபத்தான நிலையிலுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான காணிகளைத் தெரிவுசெய்யும் பணி பூர்த்தியடைந்துள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் தடைநீக்கச் சான்றுப்படுத்தலும் ஏனைய அளவைப் பணிகளும் தற்போது இடம்பெற்றுவருகிறன. அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள குறித்த நில அமைவிட விபரங்கள் உறுதிப்படுத்தல்களுக்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி

நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டத்தின்கீழ் இதுவரை 399 வீடுகளுக்கான தடைநீக்கச் சான்றுப்படுத்தலை அந்நிறுவகம் வழங்கியுள்ளது.

## 6.2 வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்

**(சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்)**

கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறையின் உயர்மட்ட வறுமைநிலைமீது பாதிப்புச்செலுத்தும் முக்கிய காரணி, அடிப்படை மற்றும் வேறு வாழ்வாதார வசதிகள் பெரிதும் பலவீனமான நிலையில் இருப்பதாகும். ஆகையால், வறுமைநிலையைத் தணிக்கும் நோக்குடன் பெருந்தோட்டப் பகுதிகளில் பிரவேச வீதிகளை அமைத்தல், குடிநீர் வழங்கல், வீடுகளுக்கு மீள் கூரையிடுதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களினதும் கருத்திட்டங்களினதும் முன்னேற்றங்கள் பற்றிய விபரம் வருமாறு:


### 6.2.1 வாழ்வதற்குப் பொருத்தமற்ற நிலையில் காணப்படும் 700 லயன் அறைகளுக்கு மீள் கூரையிடுதல்

லயன் அறைகளின் நிலையை முன்னேற்றுவதற்கு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்குரிய 7 பிராந்தியங்களினுள் அமைந்துள்ள 700 லயன் அறைகளுக்கு மீள் கூரையிடும் பணி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கணிசமான எண்ணிக்கையில் புதிய வீடுகளை அமைப்பது செலவு மிகுந்த, அதிக காலம் எடுக்கக்கூடிய ஒரு நடவடிக்கை என்பதால் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வரையில் முன்னெடுக்கப்படும் இடைக்கால நடவடிக்கையொன்றாக இச்செயற்பாடு அமைகின்றது. குறித்த 700 லயன் அறைகளுக்கும் மீள் கூரையமைத்தலின் பொருட்டு 43 மில்லியன் ரூபா செலவில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின்கீழ் வருகின்ற 7 பிராந்தியங்களுக்கும் கூரைத்தகடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 6.2.2 சுகாதாரப் பாதுகாப்பான குடிநீர் வழங்கல்

4,743 பேரைக் கொண்ட சனத்தொகையை உள்ளடக்கும் 1,054 குடும்பங்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு நுவரெலியா, ஹட்டன், கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, காலி ஆகிய 07 பெருந்தோட்டப் பகுதிகளில் 19 நீர்வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஏலவே 17 கருத்திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. 2015 டிசம்பர் மாத இறுதியுடன் இதற்கென செலவளிக்கப்பட்டுள்ள மொத்த செலவினம் 11 மில்லியன் ரூபாவாகும். தோட்டத்தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நீர்வழங்கல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய நீர்வழங்கல் தொகுதியின் பராமரிப்புப் பணி, குறித்த பயனாளிகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**பட வரைபு 2: நீர்வழங்கல் கருத்திட்டங்களின் நிர்மாணம் பற்றிய முன்னேற்றம்**



**உரு 02: இரத்தினபுரி, பலாங்கொட பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி, மதுவாகல (கீழ்ப்பிரிவு) தோட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கல் கருத்திட்டம்**






| |
|---|
| **பெறுமதி: ரூபா.** Rs. 909,850.50<br>**கருத்திட்டம் ஆரம்பித்த திகதி:**2015.02.11<br>**முடிவடைந்த திகதி:** 2015.08.05<br>**பயனாளிகள்:** 45 குடும்பங்கள் |

- **நீர்வழங்கல் செயற்றிட்டங்களின் நிர்மாணம்/முன்னேற்றங்கள்**

இதற்கு மேலதிகமாக, அடிப்படை வசதிகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 17 தோட்டங்களில் 86 குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவற்றுள் 31 மில்லியன் ரூபா செலவுடன் டிசம்பர் மாத இறுதி வரை 75 கருத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. குறித்த பிரதேச செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் எஞ்சியுள்ள நிர்மாண/மேம்படுத்தல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## 6.2.3 சுகவாழ்வு பாதுகாப்பு

லயன் அறைகளில் வாழும் பெருந்தோட்டத்துறை மக்களின் சுகவாழ்வுசார் பாதுகாப்புக்கான ஏற்பாட்டைச் செய்துகொடுக்கும் நோக்குடன் நுவரெலியா, ஹட்டன், கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி, காலி ஆகிய 07 பெருந்தோட்டப் பகுதிகளில், 700 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கென தோட்டத்தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறித்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மலசலகூடக் குழிகளை வெட்டுதல் போன்ற வேலைகளுக்கு குறித்த பயனாளிக் குடும்பங்களின் பங்களிப்புப் பெறப்பட்டும் வருகின்றது. 2015ஆம் ஆண்டு முடிவில் 636 மலசலகூடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதோடு, 2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை இச்செயற்பாட்டுக்கென 25 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 09: மலசலகூட நிர்மாணிப்புப் பணிகளின் முன்னேற்றம்**

| முன்னேற்றம் | மலசலகூடங்கள் எண்ணிக்கை | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைபொறுப்பு நிதிய (PHDT) பிராந்தியத்தில் மலசலகூடங்கள் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| 100% பூர்த்தியானவை | 636 | 100 | 61 | 90 | 100 | 100 | 100 | 85 |
| நிர்மாணப் பணிகள் தொடரப்படுப | 64 | - | 64 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **700** | **100** | **125** | **90** | **100** | **100** | **100** | **85** |

உரு 03 : இரத்தினபுரி ஹுனுவல தோட்டத்தின் 3ஆம் மற்றும் 4ஆம் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடங்கள்




பெறுமதி: ரூபா. Rs. 463,500.00
கருத்திட்டம் ஆரம்பித்த திகதி: 25.03.2015
முடிவடைந்த திகதி: 22.07.2015
பயனாளிகள்: 10 குடும்பங்கள்

## 6.2.4 பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் (CDCs)

பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பிள்ளைகளை பாடசாலைக் கல்விக்கு ஆயத்தம் செய்தல் மற்றும் அவர்களின் அறிவை விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் 600 இற்கும் மேற்பட்ட பிள்ளைகளை உள்ளடக்கக்கூடிய விதத்தில் 21 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. இதற்கான நிர்மாண ஒப்பந்த வேலைகள் தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, 2015ஆம் ஆண்டு நிறைவடையும் போது, 11 மில்லியன் ரூபா நிதி இதன்பொருட்டு செலவு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 10: சிறுவர் அபிவிருத்தி நிலைய நிர்மாணிப்புப் பணிகளின் முன்னேற்றம்

| பௌதிக முன்னேற்றம் | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (PHDT) பிராந்தியத்தில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| 100% பூர்த்தியானவை | 20 | 3 | 3 | 3 | 3 | 3 | 2 | 3 |
| 75% - 100% பூர்த்தியானவை | 1 | - | - | - | - | - | 1 | - |
| மொத்தம் | 21 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |

உரு 04: பதுளை கோணகெல தோட்டம் மேற்பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம்



பெறுமதி: ரூபா. ரூ:726,540.76
கருத்திட்டம் ஆரம்பித்த திகதி: 2015.01.06
முடிவடைந்த திகதி: 2015.07.09

### 6.2.5 இந்திய அரசின் நன்கொடையுடன் 70 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல்

நுவரெலியா, ஹட்டன், கண்டி, கேகாலை, பதுளை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய 07 பெருந்தோட்டப் பகுதிகளை உள்ளடக்கக்கூடிய விதத்தில் (பிராந்தியத்திற்கு 10 என்ற அடிப்படையில்) 70 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கான அனுமதி 2014ஆம் ஆண்டு பெறப்பட்டு,இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கமைய, 2015ஆம் ஆண்டு முடிவில்,இருபத்தொரு (21) சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 11: 70 சிறுவர் அபிவிருத்தி நிலைய நிர்மாணிப்புப் பணிகளின் முன்னேற்றம்**

| பௌதிக முன்னேற்றம் | சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்புப் (PHDT) பிராந்தியத்தில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| முழுதும் பூர்த்திசெய்யப்பட்டவை | 21 | - | 10 | 1 | - | - | - | 10 |
| பல்வேறு நிர்மாணித்தல் கட்டங்களில் | 21 | 6 | - | 2 | 4 | 4 | 5 | - |
| ஆரம்பக் கட்டத்தில் | 28 | 4 | - | 7 | 6 | 6 | 5 | - |
| மொத்தம் | 70 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |


## 6.3 பின்தங்கிய பகுதிகளின் சமூக-பொருளாதார அபிவிருத்தி

பெருந்தோட்ட சமுதாயத்தினரின் மிக முன்னேற்றமடையாத வாழிடப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து, அவர்களின் நலன்புரிசார் தேவைகளை உயர்மட்டத்திற்கு இட்டுச்செல்லும் நோக்குடன் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய பிரவேச வீதிகளை அமைத்தல், மின்சார வசதிகளையும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளையும் ஏற்பாடுசெய்தல், கல்வி வசதிகளையும் விளையாட்டு வசதிகளையும் வழங்குதல், சமய மற்றும் கலாசார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு சனசமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், அமைச்சு,தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற நிறுவனங்களினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.3.1. பிரவேசிக்கும் வீதிகளை நிர்மாணித்தலும் புனரமைத்தலும்

பெருந்தோட்ட மற்றும் கிராமிய சமூகங்கள் பிரவேசிக்கும் வீதிகளின் மீது கவனக்குவிவைச் செலுத்தி, அவற்றை நிர்மாணிக்கும் அல்லது புனரமைக்கும் செயற்பாடு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. முறையான பிரவேச வீதிகளைக் கொண்டிராத பெருந்தோட்ட சமூகங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கான நடைபாதை, படிக்கட்டுக்கள் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவும் உள்ளன. 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறான சுமார் 110 நிகழ்ச்சித்திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதோடு, குறித்த ஆண்டு முடிவடையும்போது அவற்றுள் 90 திட்டங்கள் 39 மில்லியன் ரூபா செலவில் நிறைவுசெய்யப்பட்டும் உள்ளன. எஞ்சியுள்ள 20 திட்டங்களையும் கூடிய விரைவில் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

படவரைபு 3: பிரவேசிக்கும் வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளின் முன்னேற்றம்




உரு 05: கண்டி, உடப்புசல்லாவ பெருந்தோட்டக் கம்பனிக்குரிய மடுல்கல (மேற்பிரிவு) தோட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்.




**பெறுமதி:** ரூபா.2,684,403.25

**கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது:** 2014

**முடிவடைந்தது:** 2015

## 6.3.2. கல்வி மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல்

பெருந்தோட்ட மற்றும் கிராமிய சமூகங்களிலுள்ள சிறுவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த ஆற்றல்களை விருத்திசெய்யும் பொருட்டு அவர்களை மையப்படுத்திய பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணித்தல், கற்றல் சாதனங்களையும் ஆய்வுகூட உபகரணங்களையும் ஒதுக்கீடு செய்தல், விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்தலும் அபிவிருத்தி செய்தலும் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் 34 மில்லியன் ரூபா செலவில் ஏலவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

**உரு 06: விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல்: நுவரெலியா, பம்பரகல தோட்டத்தின் குயீன்வூட் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானம்**



**பெறுமதி:** ரூபா1,275,546.25

**கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது:** 2014

**முடிவடைந்தது:** 2015

**பயனாளிகளின் எண்ணிக்கை** 350

**அட்டவணை 12: கல்வி மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தும் பணிகளின் முன்னேற்றம்**

| கருத்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் | கல்வி வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் | விளையாட்டு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் |
|---|---|---|
| 100% பூர்த்தியானவை | 31 | 23 |
| 100%- 50% | 03 | - |
| 25%- 50% | 07 | 02 |
| 0%- 25% | 17 | 04 |
| மொத்தம் | 58 | 29 |

## 6.3.3. சமய மற்றும் கலாசார வசதிகளுக்கான ஏற்பாடு

மக்களுடைய பாரம்பரிய மற்றும் கலாசார அடையாளத்தைப் பாதுகாப்பதனூடே அவர்களின் சமயச் செயற்பாடுகளை மேம்படுத்தும் குறிக்கோளுடன் அமைச்சானது பல்வகைப்பட்ட சமய மற்றும் கலாசாரக் கருத்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. அதற்கமைய,பல்வேறுபட்ட சமய மற்றும் கலாசாரச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சமய மற்றும் கலாசார மத்திய நிலையங்களை நிர்மாணிக்கின்ற மற்றும் புனரமைக்கின்ற பணிகளில் அமைச்சு ஈடுபட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 16 மில்லியன் ரூபா செலவில் 57 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவற்றுள் டிசம்பர் மாத இறுதிக்குள் 31 கருத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

**அட்டவணை 13: கலாசார மற்றும் சமய வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 100% பூர்த்தியானவை | 31 |
| 50%- 75% | 02 |
| 25%- 50% | 07 |
| 0%- 25% | 17 |
| மொத்தம் | 57 |

**உரு 07: பதுளை பல்லேகொடுவ எனுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம்**





**பெறுமதி:** ரூபா.8,715,032.43

**கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது:** 12.11.2014

**முடிவடைந்தது:** 29.01.2015

**பயனாளிகளின் எண்ணிக்கை:** 1000

## 6.3.4. விசேட கருத்திட்டங்களும் பொது வசதிகளும்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், ஒவ்வொருவருக்கும் மத்தியில் சக உறவை மேம்படுத்தல் மற்றும் மென்மேலும் செயலற்றிருக்கவிடாது பெருந்தோட்ட சமூகத்தைச் சமூகமயப்படுத்தல் போன்றவற்றுக்கான செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்களுக்குக் கூடாரங்கள், கொட்டகைகள் மற்றும் கதிரைகள் போன்றவற்றை விநியோகித்தமை மற்றும் விசேட நிகழ்வுகளின் போது பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியமை போன்ற செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டில் 25 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டன.

**அட்டவணை 14: சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த முன்னேற்றம்**
(2013/2014 ஆண்டுக்குரிய, தொடர்ந்து முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களும் உள்ளடங்கலாக)

| அமுல்படுத்தும் முகவர் | மீள் கூரையிடல் | | குடிநீர் கருத்திட்டங்கள் | | மலசல கூடங்கள் | | சி.அ.நி. (CDCs) | | பிரவேசப் பாதைகள் | | ஏனைய செயற்பாடுகள்* | | மெதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகுகளின் எண்ணிக்கை | விநியோகித்தவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியானவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்தியானவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்தியானவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியானவை | கருத்திட்டங்களின் /அலகுகளின் | பூர்த்தியானவை | அமுல்படுத்திய கருத்திட்டங்கள் /அலகுகள் | 2015 இல் பூர்த்தியானவை |
| PHDT | 825 | 825 | 30 | 27 | 740 | 666 | 91 | 41 | 28 | 12 | 42 | 38 | 1756 | **1609** |
| D.S/D.S.D/M.Cs and P.S./ அமைச்சு | - | - | 100 | 81 | - | - | 5 | 5 | 120 | 84 | 583 | 550 | 808 | 720 |
| மொத்தம் | 825 | 825 | 130 | 108 | 740 | 666 | 96 | 46 | 148 | 96 | 625 | 588 | **2564** | **2329** |

* ஏனைய செயற்பாடுகள்:சமய மற்றும் கலாசார, கல்வி மற்றும் விளையாட்டு அபிவிருத்தி, பொது வசதிகள் மற்றும் விசேட செயற்பாடுகள்
D.S./D.S.D. – மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், M.C. – மாநகர சபைகள் P.S. – பிரதேச சபைகள்

## 07. அமைச்சின் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அடைவுகள்

### 7.1 பெருந்தோட்டத்துறை சமூகத்தின் சமுதாய அபிவிருத்திக்கான ஐந்தாண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை (NPA) வகுத்தமைத்தல்

பரந்தளவிலான பங்குதாரர்களின் நிபுணத்துவ ஆலோசனைகளுடன், பத்தாண்டுகளை (2016–2025) உள்ளடக்கும் வகையில் பெருந்தோட்ட சமுதாயத்தினரின் சமூக அபிவிருத்திக்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்று அமைச்சினால் வகுத்தமைக்கப்பட்டது. இருப்பினும் அவசரமாக அமுல்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, இச்செயற்பாட்டுத் திட்டத்தை ஐந்தாண்டுகளைக் கொண்டதாகத் திருத்தியமைக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியிருந்தது. அதற்கிணங்க, 2015.12.17ஆம் திகதியன்று நியமிக்கப்பட்ட விசேட குழுவானது, குறித்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குள் அமுல்படுத்தி முடிப்பதை இயலச் செய்யும் வகையில் அதனை மட்டுப்படுத்தியதோடு, அதன் முன்னேற்றத்தைக் காலாண்டுக்கு ஒரு தடவை கண்காணிப்பதெனவும் தீர்மானித்தது. இத்தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் குறிக்கோள்கள் வருமாறு:-

- பெருந்தோட்டத்துறையின் வறுமை மட்டத்தைக் குறைத்தல், வாழ்க்கைத் தராதரங்களை மேம்படுத்தல் மற்றும் சமூக, பொருளாதார உரிமைகளை பெருந்தோட்டத்துறை மக்களும் அனுபவிக்க வழியமைத்தல்.
- பெருந்தோட்டத்துறை மக்கள் எதிர்நோக்கும் இடைவெளிகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அடையாளப்படுத்தல்.
- பெருந்தோட்டத்துறை மக்களின் அதிகமான பிரதேசங்களில் புத்தாயிரமாண்டின் அபிவிருத்தி இலக்குகளையும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளையும் அடைந்துகொள்ளல்.
- முன்னுரிமையளிக்கத்தகு உபாயங்கள்,இடையீடுகள் மற்றும் வளங்களை அணிதிரட்டும் ஏற்பாடுகள் என்பவற்றை இனங்காணல்.

பெருந்தோட்டத்துறை வாழ் மக்களின் வாழ்வுநிலையைக் கட்டியெழுப்புவதற்கான துரித, காலத்திற்கேற்ற தேவை இனங்காணப்பட்டுள்ளது. மேற்சொன்ன காலப்பிரிவில் அமுல்படுத்துவதற்கான பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும் இத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### 7.2 பெருந்தோட்டத்துறை சமூகத்தின் வாழ்வுநிலை மதிப்பை முன்னேற்ற உசிதமான வீடுகளை அமைத்து அவற்றின் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல்

07 ‘பேர்ச்’ காணிக்கான உரித்துடன் 550 சதுர அடி பரப்பளவுகொண்ட தனி வீடுகளை அரசாங்கக் கொள்கைப்படி பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், தோட்டப்புற மக்களின் வாழ்வில் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு நீர்வழங்கல்,சுகவாழ்வுசார் பாதுகாப்பு, பிரவேச வீதிகள், மின்சாரம், சனசமூக நிலையங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் இதர பொதுவசதிகளைக் கொண்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றும் வகுத்தமைத்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. லயன் அறைகளில் வாழ்வோருக்கும்,நிலச்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இரு வெவ்வேறான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாதனங்களின் உரிமை

வாழ்க்கைத்துணை இருவருக்கும் சமமாகக் கிடைக்கக்கூடிய வகையில், பால்நிலை சமத்துவத்தையும் வலுவூட்டலையும் பேணி, அதனடிப்படையில் அவற்றை உடமை கொள்வதற்கான உறுதிகள் (possessional deeds) தயாரிக்கப்பட்டு, இறுதியில் அவற்றின் உரித்துறுதிகளை (title deeds) வழங்குவதற்காக அமைச்சும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமும், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கி இப்பணியை ஆரம்பித்துவைத்து 2015 மே மாதம் 10ஆம் திகதி தலவாக்கலையில் நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட 230 குடும்பங்களுக்கு குறித்த வீடுகளை உடமை கொள்வதற்கான உறுதிகள் வழங்கி வைக்கப்பட்டன. 1,098 குடும்பங்களுக்கு அவ்வுறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 7.3 பெருந்தோட்டத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளல்

உலக வங்கியின் நிதியளிப்புடனான இரு நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 செப்டெம்பர் /ஒக்டோபர் காலப்பகுதியில் அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

- **நீர்வழங்கல் மற்றும் சுகவாழ்வுசார் பாதுகாப்பு மேம்படுத்தல் கருத்திட்டம்:** இக்கருத்திட்டம் 2015 செப்டெம்பர்/அக்டோபர் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 2020இல் பூர்த்தியடையவுள்ளது. நுவரெலியா மற்றும் ஹட்டன் ஆகிய பகுதிகள் இக்கருத்திட்டத்தின்கீழ் உள்ளடக்கப்படும் வலயங்களாகும். இக்கருத்திட்டத்தினூடாக எதிர்பார்த்த நன்மை கருதி, 150 நீர் வழங்கல் கருத்திட்டங்கள் உள்ளடங்கும். அதன்மூலம் 22,000 குடும்பங்கள் பயன் பெறுகின்றன. மேலும், பெருந்தோட்டத்துறை வாழ் மக்களின் பயன்பாட்டுக்கு 12,000 மலசலகூடங்களை அமைப்பதற்கும் இக்கருத்திட்டம் நிதி அளிக்கின்றது. உலக வங்கியுடன் குறித்த கருத்திட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, தெரிவுசெய்வதற்கான அளவுகோல்களின் அடிப்படையில், குறித்த கருத்திட்டத்தை இனங்காணும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதற்கு செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- **முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம்:** இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் பெருந்தோட்டப் பகுதி வாழ் 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் போதியளவிலும் தரமாகவும் முன்னேற்றுவதாகும். இதற்கென மதிப்பீடுசெய்யப்பட்ட கிரயம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இக்கருத்திட்டம் 2015 ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து 2020ஆம் ஆண்டில் பூர்த்தியடையும். கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் உரிய விளையாட்டு உபகரணங்களுடன் அமைக்க எதிர்பார்க்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 140 ஆகும். ஏற்கனவே பெருந்தோட்டப் பகுதிகளில் அமைந்துள்ள முன்னேற்றப்படவுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை (‘சீ’,‘டீ’ தரங்களிலுள்ளவை) 175 ஆகும். அவசியமான உபகரணங்கள் சகிதம் அமைக்கப்படவுள்ள புதிய விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை 175 ஆகும். தற்போது அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்களுள் 210 மைதானங்கள் தேவையான உபகரணங்களுடன் கூடியதாக நவீனமயப்படுத்தப்பட உள்ளன. சிறுவர் அபிவிருத்தி நிலைய ஆசிரியர்களுக்கு டிப்ளோமா பாடநெறிகளும், புத்தறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், பெற்றோரை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் இக்கருத்திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்றன.

இதற்கென மொத்தமாக மதிப்பீடுசெய்யப்பட்ட கிரயம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். புதிய சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **இந்திய நன்கொடையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்:-** அதிமேதகு இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருகைதர முன்னர் புதிதாக 20,000 வீடுகளை அமைப்பதற்கும்,தற்போதுள்ள 30,000 (லயன்) வீடுகளைத் தரமுயர்த்துவதற்கும், மேலதிக நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கமைய இக்கருத்திட்டம் குறித்து ஆராய்வதற்கு இந்திய அரசாங்கத்திடம் இக்கருத்திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுவளங்கள் திணைக்களம் இக்கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து நிதி பெற்றுக்கொள்ளும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது.

# 08. அமைச்சின் அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட நிறுவனங்களின் முன்னேற்றம்

## 8.1 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (PHDT)

### 8.1.1 பின்னணி

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது,பெருந்தோட்டத்துறைவாழ் மக்களின் வாழ்வாதார முறைமைகளை முன்னேற்றும் நோக்கில் முதற்தடவையாக 'தோட்டப்புற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்' என்ற பெயரில் 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் 1992 செப்டம்பர் மாதம் 18ஆம் திகதி தாபிக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இந்நிறுவனம் பின்னர் 2002 ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி 'பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்' எனும் பெயரைப் பெற்றது. தற்போது இந்நம்பிக்கை நிதியமானது,2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் மீளவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துக்கொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது (PHDT)பின்வரும் செயற்பாடுகளை அமுல்படுத்தி வருகின்றது:-

- தோட்டப்புற சமுதாயத்தின் லயன் அறைகளுக்குப் பதிலாக தனியலகு வீடுகளைப் பொருத்தமானவர்களுக்கு வழங்குதல்.
- தற்போதுள்ள பழைய லயன் அறை வீடுகளைத் திருத்துதலும் அவற்றிற்கு மீள் கூரையிடுதலும்.
- நீர்வழங்கல் மற்றும் சுகவாழ்வுசார் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அமைத்தல் மற்றும் தகைமையுள்ள சிறுவா் அபிவிருத்தி உத்தியோகத்தா்களை அறிமுகம் காணல்.
- சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.(வீதிகள் /கட்டிடங்கள் /மத வழிபாட்டுத்தலங்கள் முதலியன)
- சுகாதார வசதிகளை வழங்குதலும் சமூக அபிவிருத்திக்கான செயற்பாடுகளும்.
- தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தினூடாக (EWHCS), சந்தைப்படுத்தல் அபிவிருத்திசார் முன்னெடுப்புக்களை விரிவுபடுத்தல்.

### 8.1.2 தொடர்புடைய நிறுவனங்களும் நிறுவனக் கட்டமைப்பும்

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் அதிகார வரம்பெல்லையின் கீழ் இயங்குகின்றது. இது, பெருந்தோட்டத்துறையில் பத்து இலட்சத்திற்கும் கூடுதலான மக்களின் வாழ்வுநிலையைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்து, அதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக செயற்படுகின்ற இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்டத்துறை தொழிற்சங்கங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு முக்கூட்டு அமைப்பாகும்.

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது,தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்கான உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை முன்னெடுப்பதில் அரசாங்கத்தின் குறித்த அமைச்சுக்கள், தொழிற்சங்கங்கள், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள், வேறு உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புகள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயலாற்றுகின்றது.

இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தொழிற்சங்க முகவர்களை உள்ளடக்கிய ஒரு பணிப்பாளர் சபையின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்டும் தவிசாளரின் தலைமையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது இயங்குகின்றது. பணிப்பாளர் நாயகம் ஒருவரே இதன் முகாமைத்துவத்தில் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றார். உள்ளகப் பணிப்பாளர்களும் பிரிவுத் தலைவர்களும் பத்தரமுல்ல தலைமையகத்துடன் இணைக்கப்பட்ட பணியாள்தொகுதியினரும் அவருக்கு உதவியாக உள்ளனர். காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள 07 பிராந்திய அலுவலகங்கள் மூலம் தலைமையகத்தின் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பிராந்தியப் பணிப்பாளரானவர்,குறித்த பிராந்திய அலுவலகத்தின் தலைவராக இருப்பதுடன், தொழில்நுட்பம், நிதி மற்றும் முகாமைத்துவம் சார்ந்த பணியாள்தொகுதியினர் அவருக்கு உதவியாக இருக்கின்றனர்.

**உரு 08: பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் பிராந்தியக் கட்டமைப்பு**



## 8.1.3 தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் (EWHCSs) மூலம் முன்னெடுக்கப்படும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து 1993ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்ட இச்சங்கங்கள், இதுவரையில் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள்மூலம் நிர்வகிக்கப்படும் சகல 435 தோட்டங்கள் குறித்தும் தற்போது தொழிற்பட்டு வருகின்றன.

தற்போது 418 தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்க அலகுகள் நாட்டில் (பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிலும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் கம்பனிகளிலும்) நிறுவப்பட்டுள்ளன. பெரும் ஆதரவு நிலவுகின்ற பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் தோட்டங்களில் நிறுவப்பட்டுள்ள இக்கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை முன்னணி சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களாக நாடுபூராவும் நிறுவப்பட்டுள்ளன. அவை பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் குறித்துரைக்கப்பட்டு, குறித்த பிராந்திய அலுவலகங்களினால் மேற்பார்வைசெய்யப்படும் அளவுகோல்கள் மீதமைந்த உயர் தரப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன்,அவற்றின் நிரந்தர மேற்பார்வைக்கும் உட்படுத்தப்படுகின்றது.

இச்சங்க அலகுகள் 'தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்க வங்கி' என்ற பெயருடன் தமது சொந்த வங்கிகள் ஊடாக தமது நிதியங்களை உருவாக்கிக்கொள்வதுடன், கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கின்றன. இச்சங்க அலகுகளில் அங்கத்தவர்கள் தோட்ட ஊழியர்கள் / வதிவோருக்கு 2014ஆம் ஆண்டில் வீடமைப்பு நடவடிக்கைகள், விவசாய நடவடிக்கைள், திடீர் விசேட வைபவங்கள், வருமான உருவாக்கல் நடவடிக்கைகளுக்காக சுமார் 79,000 கடன்களை வழங்கியுள்ளது.

கடன் வழங்கலுக்கு மேலதிகமாக, வேலைவாய்ப்புக்களை உருவாக்கி தோட்டப்புறம் வாழ்வோருக்கு அவர்களின் சேவை மற்றும் தேவைகளைப் பொறுத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து இத்தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், சில்லறைப் பண்டங்கள்/நலன்புரி விற்பனை நிலையங்கள், சலூன்கள் மற்றும் தொடர்பாடல் நிலையங்கள் முதலான தொழில்முயற்சிகளை மேற்கொள்ள வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. தோட்டப்புறம் வாழ்வோரின் வாழ்வுநிலை, அவர்களின் சுகாதாரம், போசாக்கு,சுகவாழ்வு பாதுகாப்பு முதலியவற்றை முன்னேற்றும் பொருட்டு அவர்களுக்கு அவசியமான பண்டங்களையும் சேவைகளையும் வசதியாக அவர்களுக்குக் கிடைக்கச்செய்வதற்கு தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை தமது உப முகவர்களாக நியமித்து பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் பல்தேசிய கம்பனிகள் மற்றும் பிற முன்னணி தனியார்துறை நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கேற்பு மற்றும் வசதியளிப்புகளுடன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் பின்வரும் தேசிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன:

- **அரிசிமாவினால் தயாரிக்கப்படும் தேகாரோக்கியமிகு உணவுகள்:** நாட்டில் மிக உயர்ந்தளவில் கோதுமை மா நுகர்வு பெருந்தோட்டத்துறை வாழ் மக்களினால் நுகரப்படுகின்றது. ஆகையால், அவர்களின் பாரம்பரிய உணவுகளை ஆரோக்கியம் மிக்க மாற்று வழிமுறை ஒன்றினூடாக தயாரித்துக்கொள்ளும் பொருட்டு விசேடமானதோர் அரிசி மா கலவையை அறிமுகப்படுத்துவதன் மூலம்,அரசாங்கம் பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கின்றவர்கள் அரிசிமா நுகர்வுக்கு மாறுவதை ஊக்குவிக்கின்றது. இத்தயாரிப்பானது புதியதொரு விநியோகத்தரினால், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் வலையமைப்பினூடாக விநியோகம் செய்யப்படுகின்றது. அரிசி மா விற்பனை மூலம் ஆரோக்கியமானதொரு வருமானத்தையும் தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம் ஈட்டி வருகின்றது. சமூகத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் பொருட்டு சேவையாற்றுவதில் முக்கியமானதொரு வகிபாகத்தை வகித்து வருகின்ற இந்த வலையமைப்பினரின் வாழ்வாதாரத்துக்கு இந்த அரிசி மா விற்பனையானது கணிசமான பங்களிப்பு நல்கி வருகின்றது.

- **எரிவாயுவைப் பயன்படுத்தி மிகவும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் உணவு சமைத்தல்:**

  பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பெண்கள், களத்தில் வேலை செய்தல், குடும்பத்தினருக்காக உணவு தயாரித்தல், வீட்டு வேலைகளைச் செய்தல் மற்றும் பிள்ளைகளைப் பராமரித்தல் என பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். உணவு சமைப்பதானது,அவர்கள் விறகுகளைச் சேகரிப்பதில் பாரிய ஆபத்துக்களை எதிர்நோக்குவதற்கும், கள வேலைகளைத் தவறவிடுவதற்கும் வழிவகுக்கின்றது. விறகிலிருந்து வெளிப்படுகின்ற புகையானது, உடலாரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றது.பெருந்தோட்டத்துறைவாழ் குடும்பங்களின் ஒட்டுமொத்த சுகாதாரப் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்குடன் ‘லா.ஃ.ப்’ சமையல் எரிவாயுக் கம்பனியுடன் இணைந்து ‘வத்து பிரஜா திவி நெகும’ (தோட்டப்புற சமுதாயத்தினர் வாழ்வெழுச்சி) என்ற பெயரில் ஒரு செயற்றிட்டம்,பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்டது.இந்த செயற்றிட்டத்தினூடாக இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் பெருந்தோட்ட சமூகத்தினருக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் சேர்த்து எரிவாயு அடுப்புக்களும் அவற்றுக்குத் தேவையான உதிரிப்பாகங்களும் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூக வலையமைப்பினால் வழங்கிவைக்கப்பட்டன. பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பல குடும்பங்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துவதற்கு ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக, வேலைகளுக்கு அதிகளவில் சமுகமளித்தல், குறைந்தளவிலான சுகாதாரப் பாதுகாப்புச் செலவினம், உரத்துக்காக மரங்கள் / விறகுகள் பாதுகாக்கப்படல் மற்றும் சூழல் பாதுகாப்பு என பல நன்மைகளைத் தோட்டங்கள் அனுபவிக்கின்றன.

  இந்த உற்பத்தியானது 342 தோட்டங்களில் தற்போது பாவனையில் உள்ளதோடு, 2015ஆம் ஆண்டில் இதனூடாகத் தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கமானது 6.2 மில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளது. குறித்த இலாபத்தினூடாக அச்சங்கத்தின் தொழிற்பாட்டுச் செலவுகள் ஈடு செய்யப்பட்டுள்ளதோடு அதன் நிலைபேண்தகு தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு கொழும்பிலும், 2015ஆம் ஆண்டு சிங்கப்பூரிலும் நடைபெற்ற உலக திரவப் பெற்றோலிய வாயு உச்சிமாநாடுகளில் (World LPG Summit) இந்த செயற்றிட்டம் குறித்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **“வத்து பிரஜா ருவ சுவ சேவா” (தோட்டப்புற சமுதாய தேகாரோக்கிய சேவை):**
  பன்னாட்டுக் கம்பனி ஒன்றுடன் கைகோர்க்கும் முதலாவது சந்தர்ப்பமாக, யுனிலிவர் (ஸ்ரீலங்கா) லிமிடட்டுடன் ஒன்றிணைந்து ‘‘வத்து பிரஜா ருவ சுவ சேவா’’ எனும் பெருந்தோட்டத்துறைசார் கருத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. குறித்த நிறுவனத்தின் உப முகவராக நியமிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக அந்நிறுவனத்தின் உலகப் பிரசித்தம் பெற்ற தயாரிப்புக்களான உணவு வகைகள், தனிநபர் மற்றும் வீட்டுப் பராமரிப்புக்கான உற்பத்திகள் தற்போது பெருந்தோட்டத்துறைச் சமூகத்தில் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

  முழுக் குடும்பத்தினதும் ஒட்டுமொத்த ஆரோக்கியம், தனிநபர் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் பன்னாட்டுக் கம்பனியானது வருடம் முழுவதும் தேசியளவிலான பல ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. அவற்றினூடாக முழு சமூகமும் - அதிலும் குறிப்பாகப் பெண்களும் சிறுவர்களும் - பயனடையக் கூடியதாக அமைந்திருந்தது.

  ‘‘நிலைபேண்தகு வாழ்க்கைத் திட்டம்’’ எனும் தொனிப்பொருளின் கீழ் 2015ஆம் ஆண்டின் இறுதியில் புதியதொரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது, சிறுவர்களின் வாய்ச் சுகாதாரம், சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்களைத் தரமுயர்த்தல் மற்றும் சூழல் மாசடைவதைத் தடுத்து நிறுத்தல் போன்ற, பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்குத் துணை புரிகின்ற நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே உள்ளடக்கியதாகும். 2015ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு தோட்டங்களைச் சேர்ந்த 290 சிறுவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பயனடைந்திருந்தனர்.

  மேற்சொன்ன விடயங்களுக்கு மேலதிகமாக, இச்சேவை வலையமைப்பின் பலமான நிதி முகாமைத்துவத்தையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சம்பந்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை வருடாந்தம் கணக்காய்வுக்கு உட்படுத்துகின்றது. மேலும், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பிராந்திய அலுவலகங்கள், தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாள் தொகுதியினரினதும் சமூகத் தலைவர்களினதும் அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளன. அதற்கான நிதி தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் ‘வனிசா நிதியம்’ எனும் நிதியத்திலிருந்து பெறப்பட்டதோடு, குறித்த நிதியம் கூட்டுறவுத் திணைக்களத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்புடன் தொழிற்படும் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

## 8.1.4 அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியின்கீழ் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கருத்திட்டங்கள்

**அட்டவணை 15: 2013/2014 முன்கொணரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிராந்திய ரீதியிலான முன்னேற்றம்**

| பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பிராந்தியம் (PHDT Region) | வீடமைப்பு | | நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் | | மலசல-கூடங்கள் அமைத்தல் | | சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் | | பாதைகள் | | பிற செயற்பாடுகள் * | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | பூர்த்திசெய்யப்பட்டவை | 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டவை |
| நுவரெலியா | 203 | - | 02 | 01 | - | - | 10 | - | 02 | 01 | 07 | 07 | 224 | 09 |
| ஹற்றன் | 84 | - | - | - | - | - | 10 | 10 | 03 | 03 | 14 | 14 | 111 | 27 |
| காலி | 47 | 47 | 04 | 04 | 20 | 20 | 10 | - | - | - | 01 | 01 | 82 | 72 |
| கண்டி | 80 | - | 01 | 01 | 10 | | 10 | 10 | 18 | 03 | 01 | 01 | 120 | 15 |
| கேகாலை | 118 | 14 | 02 | 02 | - | - | 10 | - | 03 | 03 | 09 | 09 | 142 | 28 |
| இரத்தினபுரி | 65 | - | - | - | - | - | 10 | 1 | 01 | 01 | - | - | 76 | 02 |
| பதுளை | 20 | - | 02 | 02 | 10 | 10 | 10 | - | 01 | 01 | 10 | 10 | 53 | 23 |
| மொத்தம் | 617 | 61 | 11 | 10 | 40 | 30 | 70 | 21 | 28 | 12 | 42 | 42 | 808 | 176 |

* **பிற செயற்பாடுகள்:** மத மற்றும் கலாசார, கல்வி, விளையாட்டு அபிவிருத்தி, பொது வசதிகள், விசேட செயற்பாடுகள்.

**அட்டவணை 16: 2015ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டங்களின் /கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பிராந்தியம் (PHDT Region) | வீடமைப்பு | | மீளக் கூரையிடுதல் | | நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் | | மலசல-கூடங்கள் அமைத்தல் | | சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அலகுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டவை | அமுல்படுத்திய கருத்திட்டங்கள்/ அலகுகளின் எண்ணிக்கை | 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டவை |
| நுவரெலியா | 147 | 97 | 123 | 123 | 04 | 03 | 100 | 100 | 03 | 03 | 377 | 326 |
| ஹற்றன் | 62 | 62 | 100 | 100 | 03 | 03 | 125 | 61 | 03 | 03 | 293 | 229 |
| காலி | - | - | 116 | 116 | 02 | 02 | 100 | 100 | 03 | 03 | 221 | 221 |
| கண்டி | 40 | 40 | 43 | 43 | 02 | 02 | 85 | 85 | 03 | 03 | 173 | 173 |
| கேகாலை | 12 | 12 | 100 | 100 | 03 | 02 | 100 | 100 | 03 | 03 | 218 | 217 |
| இரத்தினபுரி | 30 | 30 | 119 | 119 | 02 | 02 | 90 | 90 | 03 | 03 | 244 | 244 |
| பதுளை | 47 | 47 | 99 | 99 | 03 | 03 | 100 | 100 | 03 | 02 | 252 | 251 |
| மொத்தம் | 338 | 288 | 700 | 700 | 19 | 17 | 700 | 636 | 21 | 20 | 1778 | 1661 |

**அட்டவணை 17:** 2015ம் ஆண்டின் அனுமதிக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் நிதி மற்றும் பௌதீக அறிக்கை

| தொடர் இல | செயற்படுத்தும் முகவர் | அலகுகள் | மொத்த மதிப்பீட்டு பெறுமதி | மொத்த செலவுகள் | பௌதீக அறிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 25%–50% | 51%–75% | 100% |
| 01 | நுவரெலியா | 4 | 4,205,172.89 | 2,017,474.52 | - | - | 4 |
| 02 | ஹற்டன் | 3 | 2,904,744.52 | 560,855.20 | - | - | 3 |
| 03 | காலி | 2 | 1,747,027.87 | 1,629,761.79 | - | - | 2 |
| 04 | கண்டி | 2 | 1,938,120.20 | 1,334,536.13 | - | 1 | 1 |
| 05 | கேகாலை | 3 | 1,548,249.00 | 1,548,248.49 | 1 | - | 2 |
| 06 | இரத்தினபுரி | 2 | 2,000,000.00 | 1,878,050.50 | - | - | 2 |
| 07 | பதுளை | 3 | 2,639,384.16 | 2,399,755.43 | - | - | 3 |
| | **மொத்தம்** | **19** | **16,982,698.64** | **11,368,682.06** | **1** | **1** | **17** |

**அட்டவணை 18:** 2015ம் ஆண்டின் அனுமதிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிதி மற்றும் பௌதீக அறிக்கை

| தொடர் இல | செயற்படுத்தும் முகவர் | அலகுகள் | மொத்த மதிப்பீட்டு பெறுமதி | மொத்த செலவுகள் | பௌதீக அறிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 50%-75% | 100 % |
| 01 | நுவரெலியா | 3 | 2,251,547.78 | 673,756.13 | - | 3 |
| 02 | ஹற்டன் | 3 | 2,249,515.04 | 883,950.48 | - | 3 |
| 03 | காலி | 3 | 2,247,487.79 | 1,826,789.21 | - | 3 |
| 04 | கண்டி | 3 | 2,210,003.52 | 1,250,986.97 | - | 3 |
| 05 | கேகாலை | 3 | 2,280,500.00 | 2,273,893.12 | - | 3 |
| 06 | இரத்தினபுரி | 2 | 2,250,000.00 | 2,157,311.90 | - | 3 |
| 07 | பதுளை | 3 | 2,206,018.06 | 2,171,640,30 | 1 | 2 |
| | மொத்தம் | **21** | **15,695,072.19** | **11,238,328.11** | **1** | **20** |

**அட்டவணை 19:** 2015ம் ஆண்டின் அனுமதிக்கப்பட்ட மலசலகூடங்களை அமைக்கும் செயற்றிட்டத்தின் நிதி மற்றும் பௌதீக அறிக்கை

| தொடர் இல | செயற்படுத்தும் முகவர் | அலகுகள் | மொத்த மதிப்பீட்டு பெறுமதி | மொத்த செலவுகள் | பௌதீக அறிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 50%-75% | 100 % |
| 01 | நுவரெலியா | 100 | 4,483,800.00 | 2,500,872.58 | - | 100 |
| 02 | ஹற்டன் | 125 | 4,817,700.00 | 2,410,121.50 | 64 | 61 |
| 03 | காலி | 100 | 4,770,000.00 | 4,619,367.01 | - | 100 |
| 04 | கண்டி | 85 | 4,054,500.00 | 2,189,335.13 | - | 85 |
| 05 | கேகாலை | 100 | 10,100,250.00 | 4,633,544.18 | - | 100 |
| 06 | இரத்தினபுரி | 90 | 4,233,000.00 | 4,101,573.50 | - | 90 |
| 07 | பதுளை | 100 | 4,770,000.00 | 4,130,868.92 | - | 100 |
| | மொத்தம் | **700** | **37,229,250.00** | **24,585,682.82** | **64** | **636** |

# 8.2. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்

## 8.2.1 அறிமுகம்

மறைந்த மாண்புமிகு சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் பற்றிய நினைவு நீடித்து நிலைத்திருக்கும் பொருட்டு **2005ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க** பாராளுமன்ற சட்டத்தினால் 2005ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் தாபிக்கப்பட்டது.

## 8.2.2 தொலைநோக்கு

இலங்கையர்களின்,குறிப்பாக போதிய வசதிகளும் சேவைகளும் வழங்கப்படாத கிராமிய சமூகத்தின், சமய, பொருளாதார, சமூக, கலாசார, கல்வி, அழகியல், தொழில்சார் மற்றும் பௌதிக அபிவிருத்தியை மேம்படுத்தி ஊக்குவித்தலும் இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.

## 8.2.3 பணிக்கூற்று


இலங்கையின் சகல சமூகங்களுக்கு மத்தியிலும் சமாதானம், நல்லெண்ணம், புரிந்துணர்வு மற்றும் கூட்டுறவு என்பவற்றை ஊக்குவித்து, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் விரிவான பயன்பாட்டின் துணையுடன் கிராமிய சமூகத்தின் பரந்துபட்டதும், முழுமையானதும், ஒட்டுமொத்தமானதுமான சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துகொள்ளல்.

## 8.2.4 குறிக்கோள்கள்

- இலங்கையின் சகல சமூகங்களுக்கு மத்தியிலும் சமாதானம், நல்லெண்ணம், புரிந்துணர்வு மற்றும் கூட்டுறவு என்பவற்றை மேம்படுத்தி, சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் சமூக ஒருமைப்பாட்டையும் ஊக்குவித்தல்.
- இலங்கையர்களின் சமய, கல்வி, தொழில்சார், சமூக, அரசியல், பொருளாதார, அழகியல் மற்றும் பௌதிக ரீதியிலான அபிவிருத்தியை ஊக்குவித்து, அவர்களின் அறிவையும் புரிதலையும் பொருளாதாரம், அரசியல், கல்வி, கலாசாரம், சமூகம் மற்றும் அழகியல் ஆகிய துறைகளில் உயர்வடையச் செய்தல்.
- பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்தங்கிய நிலையிலுள்ள எந்தவொரு நபரினதும் வாழ்க்கைத் தராதரங்களை முன்னேற்றுதல். அவர்களின் வாழ்விடங்களின் மீது மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனுமொரு முன்னேற்றமும், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகளும் இதனுள் உள்ளடங்கும்.
- அடிப்படையில் ஒருமித்த நோக்கங்களைக் கொண்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் உறவுகளைத் தாபித்தல்.
- பொருளாதாரம், அரசியல், கல்வி, கலாசாரம் மற்றும் சமூகம் சார்ந்த துறைகளில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் பயிலரங்கு நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.
- இலங்கை மக்களுக்கு மத்தியில் மனித உரிமைகள் மற்றும் நீதியை அணுகுவதற்கான கடமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குகந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
- இலங்கையர்களின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த ஆற்றல்களை மேம்படுத்துவதற்குப் போதியளவான வசதிகளை வழங்குதல்.

- மன்றத்தின் நோக்கங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, றம்பொட கலாசார மத்திய நிலையம், நோர்வூட் விளையாட்டு வளாகம் மற்றும் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றைப் பேணிக்காத்தல் மற்றும் பயன்படுத்தல்.

## 8.2.5 நிறுவனக் கட்டமைப்பு




"கண்காணிப்பு அலகு" என அறியப்படும் கொழும்பிலுள்ள இம்மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தினாலும், உரிய அமைச்சினாலும் மேற்படி அலகுகளின் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## 8.2.6 சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களும் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களும்

### 8.2.6.1 'பிரஜாசக்தி' (E-KIOSK) அபிவிருத்தித் திட்டம்

**உரு 09: 'பிறவுன்ஸ்வீக்' பிரஜாசக்தி நிலையம்**



தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் விரிவான பயன்பாட்டின் ஊடாக பின்தங்கிய கிராமிய சமூகத்தின் பரந்துபட்டதும்,முழுமையானதும், ஒட்டுமொத்தமானதுமான சமூகப் பொருளாதார அபிவிருத்தியை அடைவதை இந்தக்கருத்திட்டம் நோக்காகக் கொண்டுள்ளது. இக்கருத்திட்டமானது, பெருந்தோட்ட மற்றும் கிராமிய சமூகத்தின் கல்வி, சமூக, கலாசார மற்றும் சிவில் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற பணியை மாத்திரம் மேற்கொள்ளவில்லை. மாறாக, ஒரு சமூகத்தை, ஒன்றுபட்ட, தகவல்களை நன்கறிந்த மற்றும் தன்னிறைவுள்ள சமூகமாக நிலைமாற்றுவதற்குத் தொழில்நுட்பவியல் பயன்பாட்டை ஊக்கியொன்றாகப் பிரயோகிப்பதை இலகுபடுத்தவும் செய்கின்றது.

தற்போது 44 பிரஜாசக்தி நிலையங்கள் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன. முதலாவது நிலையம் 2006ஆம் ஆண்டில் வனராஜாத் தோட்டத்தில் தாபிக்கப்பட்டது.

## 8.2.6.2 தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் (TVTC) - ஹட்டன்

உரு 10: **தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் (TVTC) - ஹட்டன்**



தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் முகாமைத்துவமானது தொழிற்பயிற்சி அதிகார சபையினால் 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திடம் கையளிக்கப்பட்டது. குறித்த மன்றத்தின் கீழான முதலாவது தொகுதி தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இந்நிலையத்தில் 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டன. மன்றத்திற்கு எவ்வித செலவுமில்லாமல் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென நிபுணத்துவ போதனாசிரியர்கள் ஏழு பேரை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்து தந்தது. தற்போது போதனாசிரியர்களின் எண்ணிக்கை ஐந்தாகக் (5) குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில கற்கைநெறிகளுக்கு உள்நாட்டுப் போதனாசிரியர்களை வழங்குவதனூடாக அவர்கள் உதவியுள்ளனர். ஒவ்வோராண்டும் உச்சபட்சமாக 400 மாணவர்களைத் தொழிற்பயிற்சிச் செயற்பாடுகளில் பயிற்றுவிக்க முடியுமாக உள்ளதோடு, அவர்கள் கற்கைநெறிகளுக்கென இரு தொகுதிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

**அட்டவணை 20 : பல்வேறு கற்கைநெறிகளைத் தொடரவென 2007 – 2015 வரையான காலப்பகுதியில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை**

| இல. | கற்கைநெறியின் பெயர் | கற்கைநெறிக் காலம் | மாணவர் அனுமதிகள் | |
|---|---|---|---|---|
| | | | 2015 (ஜனவரி மற்றும் பெப்ரவரி) | 2007 - 2015 மொத்தம் |
| 1 | தன்னியக்கப் பொறிநுட்பம் (Automotive Mechanism) | 01 வருடம் | 22 | 144 |
| 2 | மின்னியலாளர் | 01 வருடம் | 16 | 129 |
| 3 | இயந்திரவினைஞர் (Machinist) | 01 வருடம் | 08 | 91 |
| 4 | வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணை உபகரணம் திருத்துனர் | 01 வருடம் | - | 66 |
| 5 | பட வரைஞர்(Draughts person) | 01 வருடம் | 07 | 45 |
| 6 | செயலாளரியல் பயிற்சி (Secretarial Practice) | 01 வருடம் | - | 76 |
| 7 | அலுமினியக் கட்டமைப்பாளர் (Aluminum Fabricator) | 06 மாதங்கள் | 21 | 278 |
| 8 | ICT | 06 மாதங்கள் | 22 | |
| 8 | மரவேலை கைவினைஞர் (தச்சர்) | 06 மாதங்கள் | 08 | 141 |
| 9 | கணினி பிரயோக உதவியாளர் | 06 மாதங்கள் | - | 345 |
| 10 | ஆடை தயாரித்தல் | 06 மாதங்கள் | 27 | 430 |
| 11 | வீட்டு மின்னுபகரண திருத்துனர் | 06 மாதங்கள் | 15 | 234 |
| 12 | விருந்தோம்பல் கற்கைநெறி (Hotel Course) | 06 மாதங்கள் | 16 | 101 |
| 13 | மோட்டார் சைக்கிள் இயந்திரவியலாளர் | 06 மாதங்கள் | 23 | 321 |
| 14 | ஒட்டுனர்(Welder) | 06 மாதங்கள் | 15 | 295 |
| 15 | 'ஒடோ கேட்'(Auto CAD)(*2009இல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது*) | 06 மாதங்கள் | - | 59 |
| 16 | தொழில்துறை தையல் இயந்திர இயக்குனர் (*2011இல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது*) | 03 மாதங்கள் | - | 132 |
| 17 | AAT (கணக்கியல் வல்லுனர்கள் சங்கம்) - (*2011இல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது*) | 06 மாதங்கள் | - | 91 |
| 18 | பொருத்துனர் - (*2010இல் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது*) | 06 மாதங்கள் | - | 35 |
| **பதிவுசெய்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** | | | **200** | **3,013** |

### 8.2.6.3 கலாசார மத்திய நிலையம் - றம்பொட

உரு 11: **கலாசார மத்திய நிலையம் - றம்பொட**




கலாசார மத்திய நிலையமானது பின்தங்கிய சமூகங்களின் கலாசார ரீதியிலான அபிலாஷைகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றைக் கட்டியெழுப்பி அவற்றை விஸ்தரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

இக்கலாசார மத்திய நிலையத்தில் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து கர்நாடக இசை, வீணை, மிருதங்கம் மற்றும் வயலின் ஆகிய வகுப்புக்கள் முழுநேரமாகப் பணியாற்றும் ஒரு ஆசிரியையின் வழிகாட்டலுக்கமைய சிறியளவில் நடைபெற்று வருகின்றன. அதனைத் தொடர்ந்து கலாசார மத்திய நிலையத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற அழகியல் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டு 2011.08.30ஆம் திகதியன்று அது உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதனூடாக ஆண்டுதோறும் 160 மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

### 8.2.6.4 நோர்வூட் விளையாட்டு வளாகம்

உரு 13: **நோர்வூட் விளையாட்டு வளாகம்**



இந்த விளையாட்டு வளாகமானது 2005ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டம் நிறைவேறியதும், மன்றத்திடம் அதே ஆண்டில் கையளிக்கப்பட்டது.

இலங்கைக் காற்பந்து சம்மேளனத்தின் நிதியளிப்புடன் 25 மில்லியன் ரூபா பெறுமதியில் காற்பந்து மைதானமொன்றை நிர்மாணித்து அபிவிருத்தி செய்வதற்கென, குறித்த சம்மேளனத்துடன் மன்றம் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2011ஆம் ஆண்டில் இந்த விளையாட்டு வளாகத்தில் காற்பந்து மைதானமொன்று நிர்மாணிக்கப்பட்டது. இம்மைதானத்தின் நிர்மாணப் பணிகள் 2011 இல் பூர்த்தியடைந்திருப்பினும், இன்னும் சில அபிவிருத்திப் பணிகள் இதில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

2012 ஜுலை மாதத்தில் உடற்பயிற்சிக் கூடமொன்றும், உள்ளகப் பூப்பந்தாட்டத் திடலொன்றும் இந்த வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டன. இந்த இரு வசதிகளையும் பயன்படுத்தும் பொருட்டு மாதமொன்றுக்கு 500 தொடக்கம் 600 வரையிலான மாணவர்கள் விளையாட்டு வளாகத்துக்கு வருகை தருகின்றனர். 2015 டிசம்பர் இறுதி வரை, இந்த வளாகத்தில் **நூற்றிப்பத்து (110) இளைஞர்கள் பதிவு செய்து** அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர். இவ்வளாகத்தில் கூடைப்பந்தாட்டத் திடல்கள் (Bsketball and Netball Courts) மற்றும் கரப்பந்தாட்டத் திடல் என்பவை 2014ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு இப்பிரதேச இளைஞர்களாலும் பாடசாலை மாணவர்களாலும் அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதான பணிகள் நிறைவடைந்ததும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட்டன. இந்த விளையாட்டு வளாகத்தினால் ஒவ்வொரு வருடமும் 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் பயனடைந்து வருகின்றனர். பயிற்சி நிகழ்ச்சிகள்கூட ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

## 8.2.7 2015 காலப்பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்

2014ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமானது கால்நடை வளர்ப்பு மற்றும் கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இருந்தது. அமைச்சின் 2015ஆம் ஆண்டுக்கான மூல வரவு-செலவுத்திட்ட முன்மொழிவானது பாராளுமன்றத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டது. அப்போதைய அமைச்சின் செலவுத் தலைப்பினுள்,கிராமியப் பகுதிகளில் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை முன்னேற்றுதல் எனும் தலைப்பின் கீழ்,சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திற்கென 200 (இருநூறு) மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து, ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமானது அதற்கென அப்போதிருந்த அமைச்சான சமூக சேவைகள், நலனோம்பல் மற்றும் கல்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சின் அதிகார வரம்பெல்லையின் கீழ் இருந்தது. இவ்வாறு சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம், சமூக சேவைகள், நலனோம்பல் மற்றும் கல்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிரற்படுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த மன்றமானது தனது மீண்டெழும் செலவையோ அல்லது மூலதனச் செலவையோ ஈடுசெய்யும் வகையில் அம்மன்றத்துக்கான நிதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. விதிவிலக்காக, மன்றத்தின் பணியாள் தொகுதியினருக்கு 2015 ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலப்பகுதிக்குரிய சம்பளத்தைச் செலுத்துவதற்கான நிதி மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்கப்பட்டதும், மன்றத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்ததுமான பயிற்சிசார் கற்கைநெறிகளும் ஏனைய செயற்பாடுகளும், நிதிகள் கிடைக்காமையினால் 2015 மார்ச் மாதத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பிற்பாடு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதை உடனடுத்து, 2015 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமானது, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி எனும் தற்போதைய (புதிய) அமைச்சின் அதிகார வரம்பெல்லையின் கீழ்க் கொண்டுவரப்பட்டு, குறித்த மன்றத்தின் பணியாள் தொகுதியினரின் சம்பள நிலுவைகளைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.



වැවිලි අංශය රටේ සංවර්ධනය සහතික කිරීමෙහිලා දායක වන ප්‍රධාන අංශයකි. එසේ වුවද විශේෂයෙන් දරිද්‍රතාව, සෞඛ්‍ය හා පෝෂණය, පූර්ව ළමාවිය රැකවරණය, අධ්‍යාපනයට ප්‍රවේශය, සෞඛ්‍යාරක්ෂිත පානීය ජලය, සනීපාරක්ෂාව සහ කාන්තා බලගැන්වීම යනාදී කරුණු සම්බන්ධයෙන් නාගරික හා ග්‍රාමීය අංශයන්හි දර්ශක හා සසඳන කළ වැවිලි අංශයේ වෙසෙන ජනතාව එවැනි පහසුකම්වලින් වඩාත් පීඩිත ජන කොට්ඨාශය ලෙස සැලකේ. මෙම ගැටලු නිරාකරණය කර ඔවුන්ගේ ජීවන මට්ටම ඉහල නැංවීමේ අරමුණින් රජය විසින් මෙම අමාත්‍යාංශය ස්ථාපිත කරන ලදී.

பெருந்தோட்டத்துறை நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதில் பங்களிப்புச் செய்யும் பிரதானமான ஒரு துறையாகும். எனினும், குறிப்பாக வறுமைநிலை, ஆரோக்கியமும் போசாக்கும், முன்சிறுவர் பராய பாதுகாப்பு, கல்விக்கான வாய்ப்பு, சுகாதாரப் பாதுகாப்பான குடிநீர், சுகவாழ்வு பாதுகாப்பு, மகளிர் வலுவூட்டல் முதலிய விடயங்கள் தொடர்பில் நகர மற்றும் கிராமிய துறைகளின் குறிகாட்டிகளுடன் ஒப்பிடுமிடத்து பெருந்தோட்டத்துறை வாழ் மக்கள் அவ்வாறான வசதிகளினால் பெரிதும் பலவீனமடைந்த மக்களாக கருதப்படுகின்றனர். ஆகவே இப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்து அவர்களின் வாழ்நிலையை முன்னேற்றும் நோக்கிலேயே அரசாங்கத்தினால் இவ்வமைச்சு தாபிக்கப்பட்டது.

The plantation sector is one of the main sectors contributing for the assurance of country's development. However, the plantation community is the most deprived community in terms of social development when compared with urban and rural sector indicators particularly on poverty, health and nutrition, early childhood care, access to education, safe drinking water, sanitation and women empowerment. In addressing the above issues, this Ministry was set up by the Government focusing on improving their living standards.

**කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය**
**மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு**
**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**